**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஓ.மு.எண்.689/ஆ5/2026, நாள்.16.02.2026**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்வளர்ச்சி – பிப்ரவரி 21 உலகத் தாய்மொழி நாளன்று அனைத்து பள்ளிகளிலும் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழியினை ஏற்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. 12.02.2024 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசாணை (நிலை) எண்.91.
2. 29.01.2026 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் குறிப்பாணை ந.க.எண்.153/2026/தமிழ்–2
3. வேலூர் மாவட்ட ஆட்சியர். அவர்களின் கடிதம் ந.க.எண். /2026, நாள். .02.2026

.....

உலகத் தாய்மொழி நாள் சிறப்பினை அனைவரும் அறியும் வகையில் 2025ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பிப்ரவரி 21 உலகத் தாய்மொழி நாளன்று அனைத்து அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இணைப்பில் உள்ள உலகத் தாய்மொழிநாள் உறுதிமொழியினை எடுக்கப்படுவதை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், துறைத் தலைவர்கள் ஒவ்வொரு ஆண்டும் உறுதிபடுத்திக் கொள்ளுமாறு பார்வை (1)–இல் கண்டுள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டு 21.02.2026–ஆம் நாள் சனிக்கிழமை விடுமுறை நாள் என்பதால் ஒருநாள் முன்னதாகவே 20.02.2026 வெள்ளிக்கிழமையன்று தாய்மொழிநாள் உறுதிமொழியினை எடுக்குமாறு பார்வை 2–இல் கண்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து பள்ளிகளில் / அலுவலகங்களில் உலகத் தாய்மொழிநாளை முன்னிட்டு 20.02.2026 அன்று காலை 11.00 மணிக்கு உறுதிமொழியினை மேற்கொள்ளுமாறும், அதனை புகைப்படம் எடுத்து b5ceovlr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு–உறுதிமொழி**

முதன்மைக் கல்வி அலுவலர்.
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள் (அனைத்து பள்ளிகள்),
வேலூர் மாவட்டம்.

நகல் –
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

# உலகத் தாய்மொழி நாள் – உறுதிமொழி

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எப்போதும் தமிழ் என்ற நடைமுறையைக் கொண்டுவரப் பாடுபடுவோம். தேமதுர தமிழோசை உலகெங்கும் ஒலிக்க எந்நாளும் உழைத்திடுவோம். அனைத்து ஆவணங்களிலும் தமிழிலேயே கையொப்பமிடுவோம். குழந்தைகளுக்கு தமிழ் மொழியில் பெயர் சூட்ட பரப்புரை செய்திடுவோம். இணையற்ற தமிழுடன் இணையத் தமிழையும் காத்து வளர்ப்போம் என்று உலகத் தாய்மொழி நாளான இன்று உளமார உறுதி கூறுகிறேன்.